வேண்டும் என்று நெடுஞ்சாலைத் துறை விரும்புகிறது. அதற்கு மாநில அரசினுடைய நிதியாதாரம் போதிய அளவு இல்லாத காரணத்தினால், இந்தத் திட்டத்தை வேறு ஏதாவது ஒரு திட்டத்தின் மூலம் செயல்படுத்தலாமா என்று யோசித்து, கட்டுதல், இயக்குதல், ஒப்படைத்தல் என்று சொல்லக்கூடிய BOT திட்டத்தில் இதைச் செய்யலாமா என்பதற்காக நிதித் துறைச் செயலாளர், நெடுஞ்சாலைத் துறைச் செயலாளர் மற்றும் நகர வளர்ச்சித் துறைச் செயலாளர் ஆகிய மூன்று பேரைக்கொண்ட ஒரு குழுவை அமைத்து அவர்கள் கடந்த 7-1-1999 அன்று ஆய்வு செய்திருக்கிறார்கள். மேலும் ஆய்வு செய்து இந்தத் திட்டத்தை BOT திட்டத்திலே செயல்படுத்தினால் வெற்றிகரமாக அமையும் என்று நான் நம்புகிறேன். அதற்கான வகையிலே இந்தத் திட்டத்தை அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது. அறிக்கை கிடைத்தவுடன் இது பற்றி முடிவு எடுக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழனி புறவழிச் சாலையைப் பொறுத்தவரைக்கும் அதுவும் நடவடிக்கையில் இருக்கிறது. அந்தச் சாலை இப்போது தேசிய நெடுஞ்சாலையாக ஆகியிருக்கிறது. ஆகவே, மத்திய அரசினுடைய நிதி ஆதாரத்தோடு பழனி புறவழிச் சாலையை அமைக்கிற திட்டத்தையும் இந்த அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

வினா எண் 153, திரு. எஸ்.எஸ். பொன்முடி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

153—

அருள்மிகு வாழைத்தோட்ட அய்யன் கோவிலுக்குக் கூடுதல் வசதிகள்

*** 16007—திரு. எஸ்.எஸ். பொன்முடி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1999 மார்ச் 23]

(அ) பல்லடம் தொகுதி, அருள்மிகு வாழைத்தோட்ட அய்யன் கோவிலுக்கு திருப்பணியும், தங்கும் விடுதியும், பிரகாரமும் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. எஸ்.எஸ். பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலுள்ள முக்கியமான கோவில்களில் அருள்மிகு வாழைத்தோட்ட அய்யன் கோவிலும் ஒன்று. அந்தக் கோவிலில் திருவிழாக் காலங்களில் பிரகாரம் சுற்றி வர முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்தக் கோவிலுக்கு வரும் பக்தர்கள் எல்லாம் மிகவும் வேண்டி விரும்புகிறார்கள். ஆகவே, அங்கு விரைவில் பிரகாரம் அமைத்துக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல, வாழைத்தோட்ட அய்யன் கோவிலால் நடத்தப்பட்டு வரும் பள்ளியில் மாணவர்கள் படிப்பதற்கான வகுப்பறைகள் பற்றாக்குறையால், அவர்கள் மர நிழலில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் புதிய வகுப்பறைகள் கட்டுவதற்காக 16 இலட்சம் ரூபாய்க்கு கருத்துரு அனுப்பப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதை நிறைவேற்றிக் கொடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவிலுக்குரிய வருமானம், ஓர் ஆண்டுக்கு 41 இலட்சத்து 17 ஆயிரத்து 882 ரூபாய். எனவே, இதிலே தக்க வருவாய் இருக்கிற காரணத்தினால்தான் ஓர் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கி நடத்துவதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டு, இன்று 621 மாணவர்களும் 430 மாணவிகளும் பயில்கின்ற பெரிய பள்ளியாக இயங்குகிறது. அதற்கான அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு இருக்கின்றன. மேலும், மொத்தத்தில் தமிழ்நாடு அரசுக்கு உட்பட்ட, அறநிலையத் துறைக்குட்பட்ட அனைத்து நிறுவனங்களிலும், கல்விக் கூடங்கள் அனைத்திலும் முழு வகையிலான வசதி செய்யப்படும் என்பதற்காக திட்டமிட்டு, எல்லாக் கோவில்களுக்கும் எல்லாப் பள்ளிகளுக்கும் அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன. அந்தவகையில், இந்தப் பள்ளி உரிய நடைமுறையைப் பெறும்.

இரண்டாவது இந்தக் கோவிலில் ஏற்கெனவே 1994-லேயும் குடமுழுக்குச் செய்யப்பட்டு இருக்கிறது. அடுத்து 2006-ல்தான் அதற்கான திருப்பணிகள் எடுத்துக்கொள்ள முடியும்; எனினும் நீங்கள் குறிப்பிட்டு இருக்கிற அந்தப் பிரதான வீதி மட்டுமல்லாமல், வேறுசில பணிகளுக்காகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும், குறிப்பாக அந்தக் கோவிலில் மேல்நிலைப் பள்ளிக்கு அறிவியல் கூடத்திற்காக 6 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல மேல்நிலைப் பள்ளியின் பிரதான கட்டடத்திற்கு, சிறப்பு மராமத்துப் பணிகளுக்காக, 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல, தாங்கள் கேட்ட பிரதான வீதிக்கும் உரிய தொகை ஒதுக்கப்படும்; ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 154, திருமதி வாசுகி முருகேசன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

154—

மாவட்ட நீதிமன்றக் கட்டடம்

***15755—திருமதி வாசுகி முருகேசன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் மாவட்ட நீதிமன்றம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூரில் மாவட்ட நீதிமன்றத்திற்குப் புதியதாக கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி வாசுகி முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் தனி மாவட்டமாகப் பிரிந்து 4 வருடங்கள் ஆகிவிட்ட சூழ்நிலையில் மாவட்டத் தலைநகரில் மாவட்ட நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்பது நம்முடைய அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. எனவே, கரூரில் மாவட்ட நீதிமன்றம் அமைக்க இனியாவது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.